1969 செப்டம்பர் 12]

சீர்காழி நகரப் பஞ்சாயத்து

*259 வினா.—திரு. கே. பி. எஸ். மணி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை ஜில்லாவிலுள்ள சீர்காழி நகரப் பஞ்சாயத்தை முனிசிபாலிட்டியாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி : சார், சீர்காழியை நகரசபையாக்குவதற்குப் போதுமான மக்கள் தொகையும் இருக்கிறது என்று கூறி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இரண்டிலேயும் முயற்சித்தோம். ஆனால் என்ன காரணத்தினாலோ அது ஒத்திக்கொண்டே போகிறது இந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அதைச் சேர்த்து நகராட்சி ஆக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் பேரூராட்சிகளை நகராட்சிகளாக்குவதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. ஒரு பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்துகிறபோது குறைந்தது 20,000 மக்கள் தொகை, அதோடு ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறைவில்லாத வருமானம் வரவேண்டுமென்பதுதான் இப்பொழுது இருக்கிற நிலை. ஆனால் இந்த இரண்டும் இருந்தால் மட்டிலும் ஒரு நகராட்சி சீரிய முறையில் செயல்படும் என்று நாம் எதிர்பார்த்துவிட முடியாது. பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதன்மூலம் மக்களுக்குப் பயன்தரத்தக்க வகையில் அதனுடைய வருமானம், மற்றைய சூழ்நிலைகள் இருக்கின்றனவா என்பதைப் பரிசீலித்துப் பார்த்துத்தான் முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவேதான் அத்தகைய நிலைகளை எல்லாம் கருத்திலே கொண்டு இத்தகைய மாற்றங்கள் செய்கிற உத்தேசம் எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) கோவில்பட்டி வட்டாரத்தில் கைநெசவுத் தொழிலாளர் வேலையின்மையும், நிவாரண நடவடிக்கைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. அழகர்சாமி அவர்கள் கோவில்பட்டி வட்டாரத்தில் கைநெசவுத் தொழிலாளர்கள் இரண்டு மாதகாலமாக வேலையில்லாமல் பட்டினி